Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 108

செவ்வாய்க்கிழமை 14 மார்ச் 2023

மாசி 30 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054




வடமாகாணம் உட்பட

## சகல பாடசாலைகளும் நாளையதினம் முடங்கும்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் ஆதரவு

யாழ்ப்பாணம், மார்ச் 14

நாடளாவிய ரீதியில் நாளை முன்னெடுக்கப்படும் தொழிற்சங்கப் போராட்டத்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் முழுமையாக இணைந்துகொள்வதாக அந்தச் சங்கத்தின் பொதுச் செயலர் சரா.புவனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அடக்குமுறைகளையும் வரிச்சுமைகளையும், விலைவாசி உயர்வுகளையும், கட்டணங்களின் அதிகரிப்புக்களையும் எதிர்த்து நாடளாவிய ரீதியில் »11



# முறையான அறிவிப்போடுதான் உள்ளூராட்சித் தேர்தல் நடக்கும்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 14

அறிவிப்பே இல்லாத உள்ளூராட்சி சபைத் தேர்தல், எதிர்காலத்தில் ஒழுங்கான அறிவிப்பு விடுக்கப்பட்டே நடைபெறும் – இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். »11

## 2024 நவம்பருக்குப் பின்பே ஜனாதிபதித் தேர்தல்!

சட்டத்தில் இடமில்லை
வல்லுநர்கள் கணிப்பு

கொழும்பு, மார்ச் 14

ஜனாதிபதித் தேர்தல் 2024ஆம் ஆண்டு நவம்பர் மாதத்துக்கு முன்னர் நடத்துவதற்கான ஏற்பாடுகள் சட்டத்தில் இல்லை என்று »11

## வன்முறைக்குழு நேற்றுக் கைது

யாழ்., மார்ச் 14

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல்வேறு வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய 5 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து இரண்டு வாள்கள் மற்றும் களவாடப்பட்ட 3 மோட்டார் சைக்கிள்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன என யாழ்.மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸார் »11

## தேர்தலைப் பிற்போடுமாறு எவரையும் தூண்டவில்லை!

நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன கருத்து

கொழும்பு, மார்ச் 14

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் எந்தப் பிரச்சினையும் இல்லை. உள்ளூராட்சி சபைத் தேர்தலைப் பிற்போடுவதற்கு எந்த அரச அதிகாரியையும் நான் தூண்டவில்லை. எதிரணியின »11

## எரிபொருள் வழங்கலிலும் கால் பதிக்கிறது சீனா

கொழும்பு, மார்ச் 14

இலங்கையின் தேவைக்காக எரிபொருள் இறக்குமதி, சேமிப்பு, விநியோகம் மற்றும் விற்பனை ஆகியவற்றில் முதலீடு செய்வதற்கு »11



போதிய கட்டடவசதி இருந்தும்

## வெயிலுக்குள் அமர்ந்தபடி பரீட்சை எழுதிய மாணவிகள்

கிளிநொச்சி, மார்ச் 14

கிளிநொச்சியிலுள்ள பிரபல பெண்கள் பாடசாலையொன்றில் கட்டடங்கள் இருக்கத்தக்கதாக மாணவிகளை வெயிலுக்குள் பரீட்சை எழுதவைத்த சம்பவம் தொடர்பில் »11



## சாதாரணதரப் பரீட்சை பிற்போடப்படலாம்!

கொழும்பு, மார்ச் 14

மே மாதம் நடைபெறவிருந்த கல்விப்பொதுத்தராதர சாதாரணதரப்பரீட்சை பிற்போடப்படலாம் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். »11

இணைய விளையாட்டால் விபரீதம்

## மாடிக்கட்டடத்தில் இருந்து குதித்து உயிர்மாய்க்க முயற்சித்த மாணவன்

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ். நகரிலுள்ள பிரபல ஆண்கள் பாடசாலையில் தரம் 11 இல் கல்விபயிலும் மாணவன் தவறான முடிவெடுத்து உயிரை மாய்க்க முயன்ற வேளையில் பாடசாலைச் சமூகத்தினரால் காயங்களுடன் காப்பாற்றப்பட்டுள்ளான்.

உயிர் மாய்ப்பு முயற்சியிலிருந்து காப்பாற் »11




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் நடத்த வலியுறுத்தி அனைத்துக் கட்சி மாநாடு!

## திஸ்ஸ விதாரண திட்டம்

கொழும்பு, மார்ச் 14

உள்ளூராட்சிமன்றத்தேர்தலை பிற்போடும் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக ஒன்றிணைந்து செயற்படுவது தொடர்பில் எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து சர்வகட்சித் தலைவர் மாநாட்டை நடத்த எதிர்பார்த்துள்ளோம் என லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

உள்ளூராட்சிமன்றத்தேர்தல் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உள்ளூராட்சிமன்றத்தேர்தல் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் இடைக்காலத் தடையுத்தரவுக்கு அப்பாற்பட்ட வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயற்படுகிறார். வாக்கெடுப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான நிதியை வழங்கவேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அனுப்பிய கடிதத்துக்கு திறைச்சேரியின் செயலாளர் வழங்கியுள்ள பதில் ஏற்றுக்கொள்ள கூடியதாக இல்லை.

நிதி விடுவிப்பு தொடர்பில் நிதியமைச்சரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என திறைசேரியின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். நிதியமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவி வகிக்கிறார். அவர் தேர்தலுக்கு நிதி ஒதுக்குவார் என்று எதிர்பார்க்க முடியாது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை தொடர்ந்து பிற்போடும் அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாட்டுக்கு சகல அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டும். அதற்காக சகல எதிர்க் கட்சிகளையும் உள்ளடக்கிய வகையில் கட்சித் தலைவர் கூட்டத்தை நடத்த எதிர்பார்த்துள்ளோம். பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்கின்றோம் என்று கூறிக்கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகளை இல்லா தொழிக்க முயற்சிக்கிறார். கட்சி என்ற ரீதியில் தேர்தலுக்குத் தயார். ஆனால் நாடு என்ற ரீதியில் தேர்தலுக்குத் தயார் இல்லை என ஆளும் தரப்பினர் குறிப்பிடுவது வேடிக்கையாக உள்ளது- என்றார். (எ-இ)

# உள்ளூராட்சித் தேர்தல் மீளவும் ஒத்திவைக்கப்படும் சாத்தியம்!

## பவ்ரல் அமைப்பு கூறுகின்றது



**கொழும்பு, மார்ச் 14**

**வாக்குச்சீட்டு அச்சிடல் பணிகளில் தாமதம், நாடளாவிய ரீதியில் இடம்பெறவுள்ள தொழிற்சங்கப் போராட்டம் ஆகியவற்றால் தபால் மூல வாக்களிப்பு பிற்போடப்பட்டு, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மீண்டும் பிற்போடப்படும் சாத்தியமே அதிகம் உள்ளது என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.**

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உயர்நீதிமன்றம் வழங்கிய இடைக்காலத் தடையுத்தரவுக்கு அப்பாற்பட்ட வகையில் ஜனாதிபதி செயற்படுகிறார். நிதி விடுவிப்பு விவகாரத்தில் இறுதித் தீர்மானத்தை நிதியமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி எடுக்க வேண்டும் என தெரிவித்து திறைசேரியின் செயலாளர் அந்தப் பொறுப்பில் இருந்து விலகியுள்ளார்.

2023 ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டு அல்ல. நாட்டில் தேர்தல் என்பதொன்று இல்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் பகிரங்கமாகக் குறிப்பிட்டுள்ளார். தேர்தலுக்கு ஆளும் தரப்பினர் தயார் இல்லை என்பதால் அவர்கள் தேர்தல் தொடர்பாக அக்கறை கொள்ளவில்லை.

பொருளாதாரப் பாதிப்பு காரணமாக தேர்தலை பிற்போட்டால் எதிர்வரும் காலங்களில் தேர்தல்களை நடத்துவது நிச்சயமற்றதாகி விடும். தேர்தலை நடத்தியதால் எந்த நாடும் வங்குரோத்து நிலை அடையவில்லை. வங்குரோத்து நிலையில் இருந்து மீள வேண்டுமாயின் மக்களாணையுடன் புதிய அரசாங்கம் தோற்றம்பெறவேண்டும்.

நிதி வழங்கினால் வாக்குச்சீட்டுக்களை அச்சிடுவோம் என்ற வாதத்தை அரச அச்சகத் திணைக்களம் மீண்டும் முன்வைத்துள்ளது. தபால்மூல வாக்கெடுப்பை எதிர்வரும் 28, 29, 30 மற்றும் 31 ஆகிய திகதிகளில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள நிலையில் ஒருவாரம் இடைவெளி உள்ள நிலையில் நிதி இல்லை என்ற தர்க்கம் முன்வைக்கப்படுகிறது.

நிதி நெருக்கடி என்று குறிப்பிட்டுக் கொண்டு வாக்குச்சீட்டு அச்சிடல் பணிகள் தாமதப்படுத்தப்படுகின்றன. மறுபுறம் தொழிற்சங்க போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இவற்றால் தபால்மூல வாக்களிப்பு பிற்போடப்பட்டு உள்ளூராட்சிமன்றத் தேர்தல் மீண்டும் பிற்போடப்படும் சாத்தியமே அதிகம் உள்ளது.

தேர்தலை நடத்தக்கூடாது என்று உறுதியான நிலைப்பாட்டில் இருந்து கொண்டு செயற்பட்டால் ஒரு சிறந்த தீர்மானத்தை எடுக்க முடியாது. தேர்தலை நடத்துவதற்கு திகதி நிர்ணயிப்பதும், நிதி நெருக்கடி என்று தெரிவித்து தேர்தலை பிற்போடுவதும் தேர்தல் தொடர்பில் நாட்டு மக்களின் நம்பிக்கை சிதைவடையும் - என்றார். (எ-இ)

# உள்ளூராட்சித் தேர்தலுக்கு நிதி கிடைக்கும் என்று நம்பவில்லை

## தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 14

உள்ளூராட்சிமன்றத்தேர்தலை நடத்துவதற்கான போதிய நிதியை நிதியமைச்சு வழங்கும் எனக் கருதவில்லை என இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமால் புஞ்சிஹேவ தெரிவித்துள்ளார். கொழும்பு, ஆங்கில ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

நீதிமன்றம் உத்தரவிட்டபடி நிதியமைச்சு உரிய நிதியை வழங்கும் என நான் கருதவில்லை. அதனால் மீண்டும் நீதிமன்றத்தை நாடவேண்டியிருக்கும். நீதிமன்றத்திடம் மீண்டும் செல்லும் நடவடிக்கைய்ய ஏற்கனவே மனுத் தாக்கல் செய்தவர்களே முன்னெடுக்கவேண்டும்.

இலங்கையின் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு, நிதியமைச்சு நிதியை வழங்கவேண்டும் என்ற உத்தரவுக்கான மனுவை ஐக்கிய மக்கள் சக்தியே சமர்ப்பித்திருந்தது.

திறைசேரி நீதிமன்றத்தின் உத்தரவைத் தொடர்ந்தும் நிராகரித்து வருவதால் இது தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளுக்காக ஐக்கிய மக்கள் சக்தி நீதிமன்றத்தை நாடினால் தேர்தலை நடத்துவதற்காக அரசமைப்பின் மூலம் ஆணை வழங்கப்பட்ட நாங்கள் எங்கள் தரப்பு நியாயத்தை நீதிமன்றத்தின் முன்னிலையில் சமர்ப்பிக்கத் தயாராக இருக்கின்றோம். நீதிமன்றத்தின் உத்தரவை மீறி நிதியமைச்சு தொடர்ந்தும் நிதியை நிராகரித்து வரும் நிலையில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயவுள்ளோம் - என்றார். (எ-இ)

# உள்ளூராட்சித்தேர்தலை நடத்தினால் மீள நெருக்கடி நிலை தோன்றுமாம்

## ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 14

உள்ளூராட்சிமன்றத்தேர்தலை நடத்தினால் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை செயற்படுத்துவதில் பாதிப்பு ஏற்படும். மீண்டும் அத்தியாவசிய சேவை விநியோகத்தில் நெருக்கடி நிலை தோற்றம் பெறும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான ஓர் ஏணியாக சர்வதேச நாணய நிதியம் காணப்படுகிறது. பெரும் போராட்டத்தை தொடர்ந்து கடன் மறுசீரமைப்பு விவகாரம் வெற்றி பெற்றுள்ளது. பொருளாதார மீட்சிக்கான ஒத்துழைப்பை வழங்க சீனா, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய முதனிலை கடன் வழங்குநர்கள் சம்மதித்துள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவியை பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்தம் இந்தமாத இறுதிக்குள் கைச்சாத்திடப்படும். நாணய நிதியத்திடமிருந்து நான்கு ஆண்டு காலத்துக்கு 8 தவணை அடிப்படையில் 3 பில்லியன் டொலர் கிடைக்கவுள்ளது.

நாணய நிதியத்தில் உத்தரவாதத்தை அடிப்படையாகக் கொண்டு உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி உட்பட சர்வதேச நிதி நிறுவனங்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளமுடியும்.

நாட்டில் நிதி நெருக்கடி தீவிரமடைந்து, நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ளது. பொருளாதார மீட்சிக்கு அரசாங்கம் என்ற ரீதியில் முன்னுரிமை வழங்கவேண்டும். பொருளாதார மீட்சிக்காக முன்னெடுத்த கடுமையான தீர்மானங்களால் நாடு தற்போது இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை தற்போது நடத்தினால் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நடைமுறைப்படுத்துவதில் பாதிப்பு ஏற்படும். மீண்டும் அத்தியாவசிய சேவை விநியோக கட்டமைப்பில் நெருக்கடி ஏற்படும். பொருளாதாரத்தை முன்னிலைப்படுத்தி செயற்படுத்த வேண்டிய தேவை காணப்படுகிறது - என்றார். (எ-இ)

# உள்ளூராட்சித்தேர்தல் இலங்கைக்கு முக்கியம்

## அமெ. தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 14

எதிர்வரும் உள்ளூராட்சித்தேர்தல் இலங்கைக்கு முக்கியமானது என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் நடத்திய 2023 ஆம் ஆண்டுக்கான தேசிய சட்ட மாநாட்டில் உரையாற்றிய தூதுவர் சங் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சுதந்திர நீதித்துறை அவசியம். தேர்தல், குடிமக்கள் அரசாங்கத்திடம் நேரடியாக வாதிடும் திறனைக் கொடுத்துள்ளது. அதனாலேயே உள்ளூராட்சித் தேர்தல் முக்கியமானது என்று கூறுகின்றேன். இலங்கையின் சுதந்திரமான தேர்தல்களின் பெருமைமிக்க வரலாறு மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்துகிறது. சட்டத்தின் ஆட்சி இல்லாத நிலையில் எந்த ஜனநாயகமும் நிலைத்து நிற்காது - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம்; மார்ச் இறுதியில் வர்த்தமானி

கொழும்பு, மார்ச் 14

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு இந்த மாத இறுதியில் வர்த்தமானி வெளியிடப்படவுள்ளது.

இதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

கடந்த சில வருடங்களாக ஐ.நா. மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகள் ஐரோப்பிய ஒன்றியம் என்பன பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குமாறு அழுத்தம் கொடுத்து வந்த நிலையில் அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்துக்குப் பதிலாக பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படாவிட்டால் இலங்கைக்கான ஜி.எஸ்.பி. வரிச்சலுகை வழங்கப்படமாட்டாது என ஐரோப்பிய ஒன்றியம் எச்சரித்திருந்தது. அதனையடுத்தே பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தில் பயங்கரவாத தடைச்சட்டத்தில் காணப்பட்ட சில விடயங்கள் நீக்கப்பட்டுள்ளன என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-14-6)

## நிதியுதவி வேண்டுமெனின்

# ஊழல் ஒழிப்புச்சட்டத்தை நடைமுறைப்படுத்துங்கள்

### நாணய நிதியம் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 14

சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவி இலங்கைக்குக் கிடைக்க வேண்டுமாக இருந்தால் இலங்கை அரசாங்கம் தேசிய ஊழல் ஒழிப்புச்சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். அத்துடன் தேசிய ஊழல் ஒழிப்புச்சட்டம் சர்வதேச நாணய நிதியத்தின் தொழில்நுட்ப உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இது தொடர்பில் தெரிவித்ததாவது:-

இலங்கைக்குக் கடனுதவி கிடைப்பதற்கு ஏதுவாக தேசிய ஊழல் ஒழிப்புச் சட்டம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற நிபந்தனை சர்வதேச நாணய நிதியத்தால் ஏற்கனவே முன்வைக்கப்பட்ட விடயம்தான். இதன்படி, தேசிய ஊழல் ஒழிப்புச்சட்டம் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவால் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு விட்டது. கடந்த செப்ரெம்பர் மாதம் சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்குமிடையே நடைபெற்ற அதிகாரிகள் மட்ட கலந்துரையாடலில் சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் இந்த விடயத்தை வலியுறுத்தியிருந்தனர். நிதி முகாமைத்துவம் மற்றும் நிதி தொடர்பான விடயங்களில் வெளிப்படைத்தன்மை பேணப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

மஹிந்த ஆட்சிக்காலம் முதல் அரசியல்வாதிகளும் அரசியல் செல்வாக்குள்ள சிலரும் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட சட்டவிரோதமான முறையில் வெளிநாடுகளில் உல்லாசமாக வசிக்கின்றனர் என சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர். இந்த ஊழல் நடவடிக்கைகள் தான் நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு பின்னர் அது அரசியல் உறுதியற்ற நிலையாக தோன்றியது.

இது தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் எனப் பலர் வலியுறுத்தி வருகின்றனர்.

எனவே கடந்த காலத்தில் திருடப்பட்ட சொத்துக்களை மீண்டும் நாட்டுக்கு எடுத்து வருவதற்கு இந்த புதிய சட்டவரைவின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ம-14-6)

# ஜனநாயகம் என்ற பெயரில் ஆட்சிக் கவிழ்ப்புச் சூழ்ச்சி!

### ஒருபோதும் அனுமதிக்கவேமுடியாது என அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 14

ஜனநாயகம் எனக் கூறிக்கொண்டு, ஆட்சிக் கவிழ்ப்பு சூழ்ச்சியிலும் நாட்டைச் சீர்குலைக்கும் நோக்கிலும் முன்னெடுக்கப்படும் போராட்டங்களை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. அவ்வாறான நடவடிக்கைகள் எமது நாட்டுக்கே பாதிப்பாக அமையும் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் அழைப்பு விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் அண்மையில் நடைபெற்ற விவாதமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் கடந்த வருடம் இதே காலப்பகுதியில் உரத்தட்டுப்பாடு ஏற்பட்டது. மின்வெட்டு அமுலானது. வரிசை யுகம் ஏற்பட்டது. உணவுப் பொருள்களுக்கான பணவீக்கம் 100 வீதத்தைத் தாண்டிச் சென்றது. இவற்றுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முடிவு கட்டியுள்ளார். நாடு இவ்வாறு நெருக்கடி நிலையிலிருந்து மீளும்போது, எதிர்க்கட்சிகள் அரசியலை ஒதுக்கி வைத்துவிட்டு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

1991ஆம் ஆண்டளவில் இந்தியாவிலும் இதேபோன்றதொரு நிலைமை ஏற்பட்டது. ஆனால், நாட்டை மீட்பதற்காக அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்தன. மக்களுக்கு சேவை செய்தன. இதனால்தான் இந்தியா இன்று 5ஆவது மிகப்பெரிய பொருளாதார நாடாக மாறியுள்ளது. எனினும், எமது நாட்டில் உள்ள அரசியல் தலைவர்களுக்கு இந்த மனநிலை இல்லை என்பது வேதனைக்குரிய விடயமாகும்.

பொருளாதார உறுதிப்பாட்டை மறந்து, அரசியலுக்காக மக்களை திருப்திப்படுத்தும் வகையில் வரிக் கொள்கைகள் கொண்டுவரப்பட்டதாலேயே நாட்டுக்கு இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. 2000ஆம் ஆண்டளவில் இலங்கையில் போர் இடம்பெற்ற காலப்பகுதியில்கூட ஏற்றுமதி 40 வீதமாக இருந்துள்ளது.

தற்போது போர்கூட இல்லை. ஆனால், ஏற்றுமதி 20 வீதமாகவே உள்ளது. முறையற்ற சில சட்ட ஏற்பாடுகளும் பின்னடைவுக்கு காரணங்களாக அமைகின்றன.

கடன் வாங்கியே நாடு நடத்தப்பட்டுள்ளதுடன், சொத்துக்களில் நிற்பது பற்றி சிந்திக்கப்படவில்லை. சிபேட்கோ நிறுவனம் பெரும் நட்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்றது. மின்சாரசபையும் இதே வழியில்தான் பயணித்துக்கொண்டிருக்கின்றது. வாங்கப்படும் கடன்களில் இவற்றுக்குத்தான் உயிர்கொடுக்கப்பட்டு கொண்டிருக்கின்றன. இதற்கு முடிவு கட்டப்படவேண்டும்.

எமது நாட்டு ஜனாதிபதி தற்போது வரி அதிகரிப்பை மேற்கொண்டுள்ளார். செல்வந்தர்கள் மீதே வரிச்சுமை திணிக்கப்பட்டுள்ளது. மக்களுக்கான சமுர்த்தித் திட்டமும் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவேண்டும். தகுதியானவர்களுக்குக் கிடைப்பதை உறுதிப்படுத்தும் நோக்கிலேயே சமுர்த்தி பட்டியல் மீளாய்வு செய்யப்படுகின்றது. எனவே, மலையக மக்களும் இதற்குக் கட்டாயம் விண்ணப்பிக்க வேண்டும்.

அதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு 16 ஆயிரம் மில்லியன் ரூபா செலவாகும். அத்தேர்தலால் ஜனாதிபதியோ, பிரதமரோ அல்லது அமைச்சரவையோ மாறப்போவதில்லை. பொருளாதாரப் பிரச்சினைகளும் தீரப்போவதில்லை. நாம் ஜனநாயகத்துக்கு எதிரானவர்கள் அல்லர் - என்றார். (ம-22)

## ஜனநாயகத்தைக் காக்கவே தேர்தலைக் கேட்கிறோம்!

### நாடாளுமன்றத்தில் டலஸ் சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 14

ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காகவே முதலில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலைக் கேட்கின்றோம். அதிகாரத்தைக் கைப்பற்றவேண்டும் என்பதற்காக நாம் தேர்தலைக் கேட்கவில்லை இவ்வாறு சுதந்திர மக்கள் சபையின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'தோல்விப் பயம் உள்ளவர்கள்தான் தேர்தலை வெறுப்பார்கள். தனிப்பட்ட அரசியல் இலாபத்தை விட ஜனநாயகத்தையே நாம் பார்க்கின்றோம். இப்போது உள்ளூராட்சி சபைகள் இல்லை.

மாகாண சபைகள் இல்லை. நாடாளுமன்றத்தை விரும்பிய நேரம் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடம் இப்போது வந்துவிட்டது. ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காகவே முதலில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலைக் கேட்கின்றோம். அதிகாரத்தைக் கைப்பற்றவேண்டும் என்பதற்காக நாம் தேர்தலைக் கேட்கவில்லை' - என்றார்.

'எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்தலை ஒத்திப்போடுமாறு கேட்கிறார்கள் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றில் கூறினார். நீங்களும் அப்படிக் கேட்டீர்களா?' என்ற ஊடகவியலாளரின் கேள்விக்கு அவர் பதிலளிக்கும் போது, 'கனவிலும் இல்லை. அவர் நகைச்சுவையாக பொறுப்பற்ற முறையில் கருத்துக்களைத் தெரிவிக்கின்றார்.

அவர் மக்கள் ஆணையை நிராகரிக்கப் பார்க்கின்றார். கடந்த காலங்களில் அவ்வாறு செயற்பட்டதால் இந்த நாடு பெரும் அழிவுகளைச் சந்தித்தது. அதே அழிவுகள் ஏற்பட இடமளிக்கக்கூடாது' - என்றார். (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புற்றுநோய் விழிப்புணர்வு: யாழில் நேற்று நடைபவனி

**யாழ்ப்பாணம், மார்ச் 14**

**புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிவது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தவும், புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவைக் காட்டவும் யாழ்ப்பாணத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபவனி இடம்பெற்றது.**

யாழ்.போதனா மருத்துவமனையின் புற்றுநோய்ப் பிரிவின் ஏற்பாட்டில், 200ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் யாழ். பரியோவான் கல்லூரியுடன் இணைந்து இந்த புற்றுநோய் விழிப்புணர்வு நடைபவனி முன்னெடுக்கப்பட்டது.

நடைப்வனியானது யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு பிரதான வீதி ஊடாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையை அடைந்து மீண்டும் பரியோவான் கல்லூரியைச் சென்றடைந்தது. விழிப்புணர்வு நடைபவனியில் பரியோவான் கல்லூரி மாணவர்கள், பழைய மாணவர்கள், மருத்துவமனை சமூகம், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-14,20)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். பணவரவு இருந்தாலும் செலவுகளும் அதிகரிக்கும். குடும்ப உறுப்பினர்களுடன் அனுசரித்துச் செல்லவும்.

**இடபம்:** காரியங்கள் அனுகூலமாகும். சகோதரர்கள் கேட்கும் உதவியைச் செய்வீர்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும். நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**மிதுனம்:** திடீர் செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பிள்ளைகளுக்காக செலவு செய்யவேண்டி வரும்.

**கடகம்:** மனதில் இனம் தெரியாத சோர்வு ஏற்படும். வாழ்க்கைத்துணையால் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும். கடன்கள் விஷயத்தில் கவனம் தேவை.

**சிம்மம்:** தாய்வழி உறவில் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஒத்துழைப்பு கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்கு திடீர் பணவரவுக்கும், திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு.

**துலாம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பிள்ளைகளால் எதிர்பாராத செலவுகள் ஏற்படும்.

**விருச்சிகம்:** மகிழ்ச்சியான நாள். ஆனால், தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்தவும். சிலருக்கு புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடவும்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. நண்பர்கள் பணஉதவி கேட்டு வருவார்கள்.

**மகரம்:** முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் விலகும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாக முடியும். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து தருவீர்கள்.

**மீனம்:** இன்று எதிலும் பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும்.

# காங்கேசன்துறையில் வெடிபொருள்கள் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறைப் பகுதியில் இருவேறு இடங்களில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை வீமன்காமம் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான வெற்றுக்காணி ஒன்றில் மண்ணில் புதைந்த நிலையில் கண்ணிவெடி இனங்காணப்பட்டது. அதன்பின்னர் இது தொடர்பில் காங்கேசன்துறைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. தகவலுக்கமைய குறித்த பகுதிக்கு விரைந்த பொலிஸார், கண்ணிவெடியை மீட்டனர்.

இதேவேளை காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அன்ரனிபுரம் பகுதியில் கடலில் கரையொதுங்கிய நிலையில் கைக்குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. நீதிமன்றத்தில் அனுமதிபெற்று இரண்டு வெடிபொருள்களையும் செயலிழக்கச் செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. (ம-14,23)



# 13 வருடங்களுக்குப் பின்னர் மீள இயங்கும் பொதுச்சந்தை

மன்னார், மார்ச் 14

13 வருடங்களுக்குப் பின்னர் முழங்காவில் 19ஆம் கட்டை பொதுச் சந்தை மீள இயக்கப்பட்டுள்ளது.

மன்னார் - யாழ்ப்பாண வீதியில் அமைந்துள்ள 19ஆம் கட்டை பொதுச்சந்தை, போர்க்காலங்களின் பின்னர் முடங்கிப்போயிருந்தது. சந்தைப்பகுதியிலிருந்த பூநகரி பிரதேசசபைக்குச் சொந்தமான கடைகளும் முற்றாக மூடப்பட்டிருந்தன. காடு பற்றிப்போயிருந்த சந்தைப்பகுதி கலாசார சீரழிவுகள் இடம்பெறும் இடமாகவும் மாறியிருந்தது.

இந்த நிலையில் பொதுச்சந்தையை மீள இயக்குமாறு பொது அமைப்புக்களால் பூநகரி பிரதேசசபைக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

கோரிக்கைக்கமைய பூநகரி பிரதேசசபையால் 13 வருடங்களின் பின்னர் அந்தப் பொதுச்சந்தை சீரமைக்கப்பட்டு தற்போது மீள இயங்க ஆரம்பித்துள்ளது. (ம-14)




# மகளிர் தினத்தை முன்னிட்டு வவுனியாவில் எழுச்சிப்பேரணி

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வவுனியா சிதம்பரநகர் சக்தி விளையாட்டு மைதானத்தில் பெண்கள் எழுச்சிப் பேரணி ஒன்று கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

அமுதசுரபி அறக்கட்டளையின் அனுசரணையில் 'எழுச்சியின் கரங்கள்' பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில் மகளிர் தினமும் பேரணியும் இடம்பெற்றது. 'வாழ்வதற்கான மாற்றத்துக்காய் எழுந்து வருகின்றோம்' என்ற தலைப்பில் இடம்பெற்ற பேரணியில் 'பெண்களின் விலங்கை உடைக்கும் ஆயுதம் கல்வியே', '[illegible] நெருக்கடிக்குத் தீர்வு வேண்டும்', 'பெண்கள் வன்முறைகளை ஒழிப்போம்' உள்ளிட்ட பல வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு பெண்கள் பேரணியில் ஈடுபட்டனர். (ம-14,110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரும்பிராய் உதவும் நண்பர்கள் அமைப்பு, உரும்பிராய் மேற்கு இளைஞர் சனசமூக நிலையம், உரும்பிராய் மேற்கு இளைஞர் கழகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாமொன்று உரும்பிராய் மேற்கு இளைஞர் சனசமூக நிலைய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ம-14,66)

# மகளிர் தினத்தை முன்னிட்டு கண்காட்சியும் விற்பனையும்

யாழ்ப்பாணம், மார்ச் 14

மகளிர் தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு மற்றும் வடக்கு மாகாண தொழிற்றுறைத் திணைக்களம் ஆகியவை இணைந்து நடத்தும் வர்த்தகக் கண்காட்சியும் விற்பனையும், யாழ்ப்பாண கலாசார மத்திய நிலைய வளாகத்தில் நாளை புதன்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை இடம்பெறவுள்ளது.

பெண் தொழில் முயற்சியாளர்களுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விற்பனையில் உணவுசார் உற்பத்திகள், கைவினைப் பொருள்கள், ஆடை உற்பத்தி மற்றும் நெசவு உற்பத்திகள், விவசாய உற்பத்திகள், பனைசார் உற்பத்திகள் போன்றன காட்சிப் படுத்தப்படவுள்ளன. (ம-14,159)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## திரவப் பணத்தின் ஊசலாட்டம்!

வடக்கு மாகாணத்தில் ஒரு வருடத்தில் சராசரியாக 2 ஆயிரத்து 500 மில்லியன் ரூபாவுக்கு போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீர் விற்பனை செய்யப்படுகின்றது என்று தெரிவித்திருக்கின்றார் வடமாகாண நீர்ப்பாசனப் பொறியியலாளர் ச.சர்வராஜா. பிரேமதாஸ ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில் இயக்கச்சியில் இருந்து அவருக்கு உலங்குவானூர்தியில் குடிதண்ணீர் எடுத்துச் செல்லப்பட்டது. இப்போதும்கூட இயக்கச்சியில் இருந்து பவுஸர் களில் தென்னிலங்கைக்கு குடிதண்ணீர் எடுத்துச் செல்லப்படுகின்றது. ஆனால், எம்மவர்கள் இயக்கச்சிக்குச் சென்றால் அங்கு போத்தல்களில் அடைத்து விற்பனை செய்யப்படும் குடிதண்ணீரையே கொள்வனவு செய்து அருந்துகின்றனர் என்றும் அவர் ஆதங்கப்பட்டிருக்கின்றார்.

வடக்கு மாகாணத்தில் ஒரு வருடத்தில் சுமார் 2 ஆயிரத்து 500 மில்லியன் ரூபாவுக்குக் குடிதண்ணீர் விற்பனை செய்யப்படுவதென்பது மிகப்பெரும் வர்த்தகச் சுழற்சி. போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீர் பெரும்பாலும் தென்பகுதியிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றது. வடக்கு மாகாணத்தில் அள்ளஅள்ளக் குறையாத குடிதண்ணீர் வளம் பல இடங்களில் நிறைந்திருக்கையில், தென்பகுதியில் இருந்து வரும் 'சுத்திகரிக்கப்பட்ட' குடிதண்ணீருக்குப் பணத்தை விரயம் செய்வதை என்னவென்று சொல்வது? 'காசைத் தண்ணீராக இறைக்கின்றார்கள்' என்றொரு 'பேச்சு மொழி' எம்மத்தியில் இன்றும் வழக்கத்தில் இருக்கின்றது. ஆனால், இங்கு அது தலைகீழாகித் தண்ணீருக்குக் காசை வாரியிறைத்துக்கொண்டிருக்கிறோம். இந்தச் சிந்தனையையும் செயற்பாட்டையும் எமக்குத் திணித்தது எந்தக் கலாசாரம்?

எல்லாவற்றையும்விட, வடக்கிலிருந்து தென்பகுதிக்கு பவுஸர்களில் தண்ணீரை எடுத்துச்செல்ல முடியுமென்றால், ஏன் அதை வடக்கிலேயே போத்தல்களில் அடைத்து விற்பனை செய்ய முடியாதுள்ளது? இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தினாலேயே 2 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா என்ற வர்த்தகச் சுழற்சியை வடக்குக்கு உரியதாக – வடக்கை மையப்படுத்தியதாக மாற்றியிருக்கலாமே? வடக் கில் ஆரோக்கியமான நல்ல குடிதண்ணீர் நிறைந்திருக்கை யில், தனியார் நிறுவனங்களின் குடிதண்ணீர் விற்பனைத் தளமாக வடமாகாணத்தை மாற்றியிருப்பதென்பதும் அதற்கு அனுமதித்ததென்பதும் எவ்வளவு பெரிய அபத்தம்?


2017 ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த ட்ரம்ப் வெற்றி பெற்று அந்த நாட்டின் 45ஆவது ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றார். ட்ரம்பை எதிர்த்துப் போட்டியிட்ட ஹிலாரி கிளிங்டன் சூறாவளிப் பரப்புரைகளை தீவிரமாக முன்னெடுத்தார். மறுமுனையில் ட்ரம்புக்கு எதிரான சேறுபூசல்களும் அசுர வேகத்தில் முன்னெடுக்கப்பட்டன. இத்தனைக்கும் ட்ரம்ப் மேற்கொண்ட ஒற்றைப் பரப்புரை 'அமெரிக்காவை மீண்டும் கட்டியெழுப்புவோம்' என்பதே. ட்ரம்ப் ஒரு வர்த்தகர். அதனால், 'ஒரு பொருளை உற்பத்தி செய்வதும் அதைச் சந்தைப்படுத்துவதும் அமெரிக்கனாக இருக்கவேண்டும். அதைக்கொள்வனவு செய்வது யாராக வேண்டுமானாலும் இருக்கட்டும்' என்பதை தனது கொள்கையாக வரித்துக் கொண்டார். அவரின் இந்தக் கொள்கை அமெரிக்காவை பொருளாதாரத்தில் மேலும் பலப்படுத்தும் என்று அமெரிக்கர்கள் நம்பினார்கள், ட்ரம்பை ஜனாதிபதியாக்கினார்கள்.

வடக்கு மாகாணத்தில் 2 ஆயிரத்து 500 மில்லியன் ரூபாவுக்கு போத்தல்களில் அடைக்கப்பட்ட குடிதண்ணீரை வைத்து மேற்கொள்ளப்படும் வர்த்தகச் சுழற்சியும் இத்தகையதுதான். பவுஸர்களில் தெற்குக்குப் போவது தண்ணீர் மட்டுமல்ல கூடவே எங்களின் பணமும்தான். இயற்கை யாக தண்ணீரில் உள்ள ஊட்டச்சத்துக்கள் அகற்றப்பட்ட நிலையில்தான் தண்ணீர்போத்தல்கள் விற்பனை செய்யப்படுகின்றன. இதன் காரணமாக இயற்கையாகவே உடலில் சேரவேண்டிய ஊட்டச்சத்துக்கள் போத்தல் தண்ணீரை அருந்துவதன்மூலம் கிடைக்காது போகின்றது என்பதை நாம் மறந்துவிடு கின்றோம். எத்தனை பெரிய கோமாளிகள் நாங்கள்?

நாளொரு நல்வார்த்தை

"சிக்கல்களை எதிர்கொள்ளும் போது கூடவே சில திறமைகளும் வெளிப்படுகின்றன"

– அப்துல் கலாம்




# வாக்குரிமைக்காக மக்கள் வீதிக்கு இறங்கவேண்டும்!

## எதிர்க்கட்சித் தலைவர் அழைப்பு

**கொழும்பு, மார்ச் 14**



**திட்டமிட்ட வகையில் அரசாங்கம் தேர்தலைப் புறக்கணிக்கின்றது. எனவே மக்கள் வாக்குரிமைக்காக வீதிக்கு இறங்க வேண்டும். அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ.**

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நாட்டை அழித்து, மக்களின் வாழ்வைச் சீரழித்து மக்களை அழிவின் விளிம்புக்கு இட்டுச் சென்ற முன்னாள் அரசுக்கும், தற்போதைய அரசுக்கும் தேர்தல் என்ற வார்த்தையைக் கேட்டாலே அச்சம் எழுந்துள்ளது. அவர்களால் மக்களிடம் செல்ல முடியாததாலேயே இந்தநிலை ஏற்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்கு 10 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்ட போதிலும் தற்போது தேர்தலுக்குப் பணம் இல்லை என்று கூறுகின்றனர். உயர் நீதிமன்றம் தேர்தலுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தை வழங்கவேண்டும் என்று இடைக்காலத் தீர்ப்பு வழங்கினாலும், நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் மீறப்பட்டதாக இந்த அரசு தவறான வாதத்தை உருவாக்கி அதன்மூலம் உயர்நீதிமன்ற நீதிபதிகள், தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களைச் சிறப்புரிமைக் குழுவுக்கு அழைத்து, சுயாதீன தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கும் பக்கச்சார்பற்ற நீதித்துறைக்கும் அழுத்தம் கொடுக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைக் குழுவின் பணிகள் முடியும் வரை இந்தச் சட்ட நடவடிக்கைகள் அனைத்தும் இரத்துச் செய்யப்படவேண்டும் என்று அவர்களுக்கு ஆதரவளிக்கும் மக்கள் பிரதிநிதிகளிடம் கோரப்படுகின்றது. எனவே, வாக்குரிமைக்காக வீதியில் இறங்கி அரசைத் தோற்கடிக்க மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்" - என்றார். (ம-22)

# விமல் வீரவன்ஸவுக்கு நீதிமன்றம் பிடியாணை

கொழும்பு, மார்ச் 14

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸவைக் கைதுசெய்ய கொழும்பு பிரதான நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் அல் ஹுசைன் இலங்கை வந்தபோது பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ மற்றும் 7 பேருக்கு எதிராக கறுவாத்தோட்டம் பொலிஸாரால் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. விசாரணைக்கு சமுகமளிக்காத நிலையிலேயே அவரைக் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு கொழும்பு பிரதான நீதிவான் பிரசன்ன அல்விஸ் பிடியாணை பிறப்பித்துள்ளார். (ம-14,இ)

நாளை 15.03.2023 புதன்கிழமை பங்குனி 01

சுபநேரம் : 04.51 - 06.21
ராகுகாலம் : 12.21 - 01.51

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலய இல்ல மெய்வன்மை திறனாய்வுப் போட்டிகள் கடந்த 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.
அதிபர் நா.இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மைவிருந்தினராக தீவக கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் பொ.சசீலன் கலந்துகொண்டார். (ய-9)



மன்னார் - பெரியபண்டிவிரிச்சான் மகா வித்தியாலயத்தின் 2023ஆம் ஆண்டுக்கான இல்ல மெய்வன்மை திறனாய்வு போட்டிகள் பாடசாலையின் அதிபர் யு.ஏ.ஜெயசீலன் தலைமையில் கடந்த 9ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்றது. (ய-213)




தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் நிலவும் குருதித் தட்டுப்பாட்டைக் கருத்திற் கொண்டு விளையாட்டு வீரரான சு.சதீஸ்கண்ணா ஞாபகார்த்தமாக, சண்டிலிப்பாய் வடக்கு ஆலங்குளாய் சனசமூக நிலைய நிர்வாகத்தின் ஏற்பாட்டில், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை குருதிவங்கிப் பிரிவின் அனுசரணையில் குருதிக்கொடை முகாமொன்று அண்மையில் இடம்பெற்றது. (ம-14-66)

# கௌரவிப்பு

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவு தின விழாவும் சங்க ஊழியர் நலன்புரிசங்கத்தின் ஒன்றுகூடல் நிகழ்வும் சங்க மண்டபத்தில் கடந்த 9ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்றது.
சங்கத் தலைவர் கு.ஜனகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சங்க அங்கத்தவர்களாக நீண்ட காலம் செயற்படும் ஒன்பது முதியவர்கள் முதன்மை விருந்தினர் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரனால் பொன்னாடை போர்த்தி மதிப்பளிக்கப்பட்டனர்.
அத்துடன் கடந்த 2020, 2021, 2022 ஆகிய ஆண்டுகளில் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகள் மற்றும் சங்கத்தில் சேவையாற்றி இளைப்பாறிய மற்றும் விலகிய பணியாளர்கள். மதிப்பளிப்பும் இடம்பெற்றன.
மேலும் கடந்த வருடம் பொதுமக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்கிய கிளை முகாமையாளர்களும் மதிப்பளிக்கப்பட்டனர் (ய-9)







சித்தங்கேணி சிறிகணேசா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி பாடசாலையின் மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. (ய-27)



ஆவரங்கால் அரிச்சுவடி முன்பள்ளியில் கால்கோள் விழா வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையால் அண்மையில் நடத்தப்பட்டது. (ய-66)



இலங்கை முதலுதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபையினரால் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியில் முதல் உதவி, ஆன்மீகம், தலைமைத்துவம், வீதி ஒழுங்கு ஆகிய பயிற்சி வகுப்புக்கள் அண்மையில் இடம்பெற்றன. பயிற்சியினை தவத்திரு வேலன்சுவாமிகளின் ஆலோசகர், நிர்வாக திட்டமிடல் பணிப்பாளர் அன்பரசன், ஆசிரியர் மனோன்மணி, பொதுச்சுகாதார பரிசோதகர் அருள்குமரன், வீதி போக்குவரத்து பொலிஸ் அதிகாரி ஆகியோர் வழங்கினர். (ய-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 15 . 06 . 1965

மறைவு 11 . 03 . 2023

## ஜெசிகலா ஜெயக்குமார்

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் முத்திரைச் சந்தியடி நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெசிகலா ஜெயக்குமார் கடந்த (11.03.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீவரெத்தினம் சரோஜினிதேவி தம்பதியரின் மகளும், நாகரட்ணம் சிவகாமிபிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற ஜெயக்குமார் (சிவம்) அவர்களின் அன்பு மனைவியும், பிரசாந்தனின் அன்புத் தாயாரும், டயஷ்ஷாவின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சரவணமுத்துவின் (கிளாக்கர்) பேர்த்தியும், ரவிச்சந்திரன், சூரியகலா, சந்திரகலா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சூரியகுமார் (கோபு), வதனி, முகுந்தன், இராசன், தேவா, தயாபரி, சுந்தரலிங்கம், காலஞ்சென்ற சசிநேசன் ஆகியோரின் மைத்துனியும், தக்சிகாவின் சித்தியும், பிரணஸ்வனின் அத்தையும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், யோகராசா மற்றும் இராஜராஜேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் பெறாமகளும், காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், நவராசா, திருச்செல்வம் மற்றும் விக்கினேஸ்வரன், காலஞ்சென்ற சற்குணம் மற்றும் மகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2023) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(cs23954) (2.6)

# நன்றி நவிலல்



கடந்த (05.03.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்த
எமது குடும்பத் தலைவி

## திருமதி கார்த்திகேசு மகிழரெத்தினம்

அவர்களின் இறுதிச்சடங்கிலும், அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும் உதவிய உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் வெளிநாட்டில் இருந்து உதவி புரிந்த உறவின்ர்கள் மற்றும் ஏனையோருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியறிதலை நவில்கின்றோம்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு"

918, கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தின் சார்பாக
கே.க.தேவகுமாரன்.
"றெக்ஸ் ஸ்ருடியோ"

(CS 23958) 1-6

## கொக்குவிலில் பணம் திருட்டு!


யாழ்ப்பாணம், மார்ச் 14

கொக்குவில் பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்து 41 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர். திருட்டுத் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. முறைப்பாட்டுக் கமைய விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-14,23)

# 13 ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்

## அமரர் சவரிமுத்து தேவசகாயம்

மண்ணில் 08.02.1923 விண்ணில் 14.03.2010




அன்புடனும் பண்புடனும்
எமை வளர்த்து
ஆக்கமும் ஊக்கமும் தந்து
அவனியிலே சீரும் சிறப்புடனும் வாழ
என்றும் எமக்காக வாழ்ந்த தேவனே
தொடர்ந்தும் எமக்காய் வான் வீட்டில் இருந்து
நம்பிக்கை நட்சத்திரமாய்
வழிகாட்டிட வேண்டிநிற்கும்

இல. 28, றக்கா வீதி,
சுண்டிக்குளி.

(cs 23900) (2.6)

என்றும் பசுமை நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் , பூட்டப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்



தோற்றம் 22 - 11 - 1946

மறைவு 13 - 03 - 2023

## இராசையா பரஞ்சோதிநாதன்

ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் 45, சிவகுருநாதர் வீதி, நீராவியடியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா பரஞ்சோதிநாதன் நேற்று (13.03.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் இராசையா சிவபாக்கியம் அவர்களின் ஏக புத்திரனும், ரமனேஸ்வரி அவர்களின் அன்பு மிகுந்த கணவனும், முத்துக் குமாரசாமி விசாகலட்சுமி அவர்களின் மூத்த மருமகனும், ஜஜீந்தன், சுயதா, சுதர்சன், தர்மேஷ், வாகீசன், சுகிர்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுரேஷ்குமார், தயாளன், பானுப்பிரியா, சத்தியவாணி, சுயரித்ரா ஆகியோரின் மாமனாரும், வைஷ்ணவி, பிரணவி, சானுயன், பிரியங்கா, பிரியஷா, வர்ணிஹா, அக்ஷரா, சதுஸ்ரிகா, துசாந், ஹரிணி, ஜஷானி ஆகியோரின் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (14.03.2023) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

45, சிவகுருநாதர் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

(CS 23694) (5/6)

தகவல்:
குடும்பத்தினர்
074 290 3401

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் கந்தையா கதிரமலைநாதன்

மலர்வு 23.04.1940 உதிர்வு 04.02.2018

## அமரர் நாகேஸ்வரி கதிரமலைநாதன்

மலர்வு 22.03.1950 உதிர்வு 08.03.2018


ஆண்டுகள் ஐந்து சென்றாலும் கண்ணெதிரே
நாம் கண்ட முதல் கடவுள் நீங்கள்
வாழும் காலம் முழுவதும் உங்களுடன்
நாங்கள் தான் பயணிக்கவில்லை
நீங்கள் மண்ணை விட்டு விண்ணுலகம் சென்றாலும்
உங்கள் நீங்கா நினைவலைகள் என்றும்
எங்கள் மனதில் செடியாய் துளிர்விட்டுக் கொண்டிருக்கும்.

உங்கள் நினைவுகளை சுமந்து நிற்கும்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 21.08.1955 — மறைவு 11.03.2023

## கனகரெத்தினம் புவனேஸ்வரன்

நயினாதீவை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருவாளர் கனகரெத்தினம் புவனேஸ்வரன் அவர்கள் கடந்த (11.03.2023) சனிக்கிழமை நயினாதீவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரெத்தினம் கனகம்மா தம்பதியரின் மகனாரும், காலஞ்சென்ற வே.கந்தையா (ஆசிரியர், சோதிடர்) சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகனாரும், யோகேஸ்வரியின் (ஆசிரியை) அன்புக் கணவரும், பவதாரணி, லவன், கனகாம்பரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், போல் (Paul Yashwant) மகுவா (Mahua) ஆகியோரின் மாமனாரும், பங்கையாசினி, விமலா தேவி, மணிவாசகர், அமரர் நாகேஸ்வரன், அமரர் சர்வகலா நாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.03.2023) புதன் கிழமை தம்பகைப்பகுதியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

பவதா +4 905 815 3271 (WhatsApp)
லவன் +1 416 357 1605 (WhatsApp)

(CS 23963) 1-6

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# 45ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 18 . 08 . 1985 — மறைவு 29 . 01 . 2023

கடந்த (29.01.2023) ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் பாசமிகு இளைய புதல்வன்

## அமரர் சண்முகலிங்கம் பிரதாப்

(உரிமையாளர் - வதனி ஜுவல்லறி, கொடிகாமம்)

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (14.03.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெறும். அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.)

பொற்கொல்லர் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.
077 800 2724
076 109 1915

(CR 39439) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குத்துச்சண்டையில் தங்கம் மாணவிகளுக்கு நிதியுதவி

வவுனியா, மார்ச் 14

குத்துச்சண்டைப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவிகளுக்கு விமானப் பயணசீட்டுக்கான நிதியுதவி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கிடையிலான தேசிய மட்ட குத்துச்சண்டை போட்டியில் வவுனியா ஸ்ரீராமபுரம் திருஞானசம்பந்தர் வித்தியாலயம், புதுக்குளம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவிகள் தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங் களைப்பெற்று சாதனை புரிந்துள்ளனர்.

அவர்கள் இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் இடம்பெறவுள்ள குத்துச்சண்டைப் பயிற்சி முகாமில் பங்குகொள்வதற்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் பொருண்மியம் நலிந்த குடும்பத்தில் வசிக்கும் மாணவிகளுக்கு இந்தியா செல்வதற்கான விமானப் பயணச்சீட்டுக்கான நிதியுதவி வழங்கப்பட்டது. தமிழ் விருட்சம் அமைப்பின் ஏற்பாட்டில் சுவிஸ் தமிழ் சேவை நிறுவனத்தின் நிதி அனுசரணையில் மாணவிகள் மூவருக்கும் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது. (ம-14,110)

# நீண்டகால சீரமைப்பின்றி முத்தையன்கட்டுக்குள வீதி

## பயணிகள் விசனம்

முல்லைத்தீவு, மார்ச் 14

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் - முத்தையன்கட்டுக்குள வீதி பலவருடங்களாக புனரமைப்பு செய்யப்படாததால் சிதில்மடைந்து, வீதியூடாகப் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்ததாவது:-

ஒட்டுசுட்டான் - முத்தையன்கட்டுக் குளத்துக்குச் செல்லும் வீதி நீண்டகாலமாகப் புனரமைப்பின்றி சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது. இதனால் வீதியில் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்நோக்க நேரிடுகிறது. கர்ப்பிணித் தாய்மார்கள், வயோதிபர்கள் உள்ளிட்டோரும் அதிகளவில் இந்த வீதியைப் பயன்படுத்துகின்றனர்.

முத்தையன்கட்டு வீதியில் சுமார் இரண்டு கிலோமீற்றருக்கு அப்பாலுள்ள பகுதியில் பாலம் ஒன்றும் உடைந்த நிலையில் காணப்படுகிறது. அந்தப் பாலத்துக்கு அருகில் கழிவுகளும் கொட்டப்படுகின்றன.

இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தப்பட்டபோதும் இதுவரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. எனவே நீண்டகாலமாகப் புனரமைப்பின்றி காணப்படும் இந்த வீதியை உடன் புனரமைக்க உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தவேண்டும்- என்றனர். (ச-19)



# நூல் வெளியீடும் நினைவுப் பேருரையும்



யாழ்ப்பாணம், மார்ச் 14

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத் தலைவரும், சைவத்தமிழ் அறிஞருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் எழுதிய 'திருக்கேதீச்சர இலக்கியம்' நூல் வெளியீடும், அகில இலங்கை இந்துமாமன்றத்தின் முன்னாள் தலைவரும், மூத்த சட்டத்தரணியுமான கந்தையா நீலகண்டன் ஞாபகார்த்த நினைவுப் பேருரையும் நல்லூரில் அமைந்துள்ள அகில இலங்கை இந்துமாமன்ற யாழ்.பிராந்திய நிலையத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றன.

நிகழ்வில் கந்தையா நீலகண்டனின் உருவப்படத்துக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. திருக்கேதீச்சர இலக்கிய நூலை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் வெளியிட்டு வைக்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் கலைப் பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ் தம்பதிகள் பெற்றுக்கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து வடமாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர்ப்பாசனப் பொறியியலாளர் எந்திரி ச.சர்வராஜா கலந்துகொண்டு 'யாழ்.நீர் வழங்கல் மீதான ஆபத்துக்களும் வாய்ப்புக்களும்' எனும் தலைப்பில் நினைவுப்பேருரை ஆற்றினார். கோப்பாய் சுப்பிரமுனிய கோட்ட முதல்வர் ஆன் மிகச் சுடர்ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

(ம-14,66)

# வேலைவாய்ப்பில் பணமோசடி இதுவரையில் 23 பேர் கைது!

கொழும்பு, மார்ச் 14

ஐரோப்பிய நாடுகளில் வேலை பெற்றுத்தருவதாகக்கூறி பணமோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இதுவரையில் 23 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆண்டின் முதல் இரண்டு மாத காலப்பகுதி யினுள் 123 பேர் மோசடிக் கும்பல்களால் ஏமாற்றப்பட்டுள்ளனர் என்றும், ஐரோப்பிய நாடுகளில் வேலை பெற்றுத்தருவதாக ஒருவரிடமிருந்து 20 இலட்சம் முதல் 30 இலட்சம் வரை அறவிடுகின்றனர் என்றும் வேலை வாய்ப்புப். பணியக அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

இந்த முறைப்பாடுகளையடுத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைளிலேயே 23 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(ம-14-26)


## சமையலாள் தேவை

கொக்குவில், திருநெல்வேலி, நல்லூர் ஆகிய பகுதியில் வசிக்கும் சமையலாள் ஒருவர் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
077 120 9998

## வீடு வாடகைக்குத் தேவை

பிரபல நிறுவனமொன்றிற்கு விசாலமான வாகனத் தரிப்பிட வசதியுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை.
(யாழ். நகரிலிருந்து 10 KM உட்பட்டதாக இருத்தல் வேண்டும்).

தொடர்பு: 077 120 9998

## வருக வருக என இரு கரம் கூப்பி வரவேற்கின்றோம்

Congratulations



**Mrs. Vasugi Thavabalan (SLP-1)**
B.Sc.(Hons.), PGDE.(Distinction), M.Ed., M. Phil., PGDEM.(Merit),
Principal, Jaffna Vaidyeshwara College.

மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய நமது யாழ் வைத்தீஸ்வரா கல்லூரியின் அதிபர் திருமதி வாசுகி தவபாலன் அவர்கள் தனது மருத்துவ விடுப்பை முடித்துக் கொண்டு தனது கடமையை மீண்டும் உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

கடவுளை நம்பினோர் கைவிடப்படார் நன்மை செய்பவர்களையும் உண்மையாக சேவை செய்பவர்களையும் கடவுள் என்றுமே கருணையோடு அரவணைப்பார் அந்த வகையில் எங்கள் அனைவரையும் காக்கும் வைத்தீஸ்வரப் பெருமான் எங்கள் அனைவராலும் மதிக்கப்படும் விரும்பப்படும் அன்னையை காத்து மீண்டும் கல்விச் சேவை ஆற்றிட அடி வானில் காலைக் கதிரவன் பல வர்ணங்களுடன் தனது ஒளிக் கதிர்களை பரப்பி உலகிற்கு ஒளியை கொடுப்பது போல் மீண்டும் சிங்கப் பெண்ணாய் கடமை கண்ணியம் கட்டுப்பாடுக்கு எடுத்துக்காட்டாய் வலம் வரும் அன்னையே நீங்கள் மீண்டும் கல்லூரிக்கு வருகை புரிந்து உங்கள் சேவையை ஆரம்பித்ததில் நாம் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

அன்புக்கு தாயாய், கண்டிப்புக்கு தந்தையாய், ஆலோசனைக்கு உற்ற நண்பனாய், மாதா பிதா குரு தெய்வம் என்ற சொல்லுக்கு அமைவாக செயலாற்றும் அன்னையே உங்களை வருக வருக என இரு கரம் கூப்பி வரவேற்கின்றோம்.

**யாழ் வைத்தீஸ்வரா கல்லூரி முன்னாள் மாணவ நண்பர்கள், நலன்விரும்பிகள், யாழ் வண்ணார்பண்ணை சமூகத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 12 பரீட்சை பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், மார்ச் 14
2023 ஆம் ஆண்டு 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான 3ஆம் தவணைத் தேர்வு, நாளை 15ஆம் திகதி புதன்கிழமை ஆசிரிய தொழிற்சங்கப் போராட்டம் நடைபெறவுள்ளதால் தேர்வுகள் அனைத்தும் பழைய நேர அட்டவணையில் குறிப்பிட்ட திகதியிலிருந்து ஒரு நாள் பிந்திய திகதியில் நடைபெறும் என்று தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் அறிவித்துள்ளது. மேலும் திருத்தப்பட்ட நேர அட்டவணையானது அனைத்துப் பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.14)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திருமதி
T. செல்வநாயகி
திதி:- மாசிமாத தேய்பிறை சப்தமி

அன்பு, கருணை,
இரக்கமுடைய
எழில்நிறை அம்மா
உங்கள் நினைவுகள்
என்றும் எம்முள்
நிறைந்தே வாழும்

மலர்வு 10.06.1930
உதிர்வு 23.02.2022

குடும்பத்தினர்.
மகள்.
இணுவில் மேற்கு,
இணுவில்.

## பணிப்பெண் தேவை

யாழ்.நல்லூர்ப் பகுதியிலுள்ள வீட்டில் தங்கி நின்று வயதான பெண்ணொருவரை பராமரிக்கக்கூடிய பணிப்பெண் தேவை.

**074 290 7577**

## வாடகைக்கு

யாழ். வைத்தியசாலை வீதியில் கட்டடம் வாடகைக்கு உண்டு. அலுவலகத்திற்கும் ஏற்றது.

**077 162 0626**

(CS 23899) (2.6)


# மஹிந்தவை பிரதமராக்க திட்டம் எதுவுமேயில்லை

## ஜனாதிபதி ரணில் அழுத்தம் திருத்தமாகத் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 14
இந்த அரசாங்கத்தில் மீண்டும் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்கும் எண்ணம் மஹிந்த ராஜபக்சவுக்கு இல்லை. அரசின் கட்டமைப்பைச் சீர்குலைக்க முயற்சிப்பவர்கள் நாளுக்கு நாள் வதந்திகளை வெளியிடுவார்கள். அதில் ஒன்று தான் மீண்டும் பிரதமர் பதவியை மஹிந்த ராஜபக்ச பொறுப்பேற்கவுள்ளார் என்பதும் அடங்கும் என்று நான் நினைக்கின்றேன் -இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
மஹிந்த ராஜபக்சவை மீண்டும் பிரதமராக்குவதற்கு பொதுஜன பெரமுனவினர் அழுத்தம் கொடுப்பதாக தென்னிலங்கை ஊடகங்களில் வெளியான செய்திகள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கொழும்புச் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கே மேற்கண்டவாறு பதிலளித்தார்.
'தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கு ராஜபக்ச தரப்பிலிருந்து எந்த அழுத்தமும் இல்லை. மஹிந்த ராஜபக்ச தலைமையிலான சிறிலங்கா பொதுஜன பெரமுன பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கு முழு ஆதரவு வழங்குகின்றது. பொதுஜன பெரமுனவின் நம்பிக்கையை வென்ற சிறந்த அரசியல்வாதி என்றபடியால்தான் தினேஷ் குணவர்த்தனவை இந்த அரசாங்கம் பிரதமராக நியமித்தது. அரசின் கட்டமைப்பைச் சீர்குலைக்க முயற்சிப்பவர்கள் நாளுக்கு நாள் வதந்திகளை வெளியிடுவார்கள். அதில் ஒன்று தான் மீண்டும் பிரதமர் பதவியை மஹிந்த ராஜபக்ச பொறுப்பேற்கவுள்ளார் என்பதும் அடங்கும் என்று நான் நினைக்கின்றேன்' -என்றார். (அ-ஒ.5,22)

# ரூபாவின் வலுவடைவு: அரசியல் கற்பனையே!

## ஜே.வி.பி. கடுமையாகச் சாடுகிறது

கொழும்பு, மார்ச் 14
டொலருக்கு நிகராக இலங்கை ரூபாவின் பெறுமதி உயர்வதாகக் கூறுவது அரசியல் நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்ட கற்பனைக் கதை என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்துள்ளார்.
'தேர்தலை நடத்தலாமா? வேண்டாமா? என்று முடிவு செய்யவும், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மக்கள் கொந்தளிப்பைச் சமாளிக்கவும், மக்களை ஏமாற்றவும் இந்தக் கட்டுக்கதை பயன்படுகின்றது. நாடு அபிவிருத்தி அடைந்து வருகின்றது என்றும் தற்போதைய அரசாங்கத்தை மாற்ற வேண்டிய அவசியமில்லை என்றும் கூட கட்டுக்கதைகள் பரப்பப்படுகின்றன. நாட்டின் பொருளாதாரத்தைக் கருத்திற்கொண்டு மத்திய வங்கி முடிவுகளை எடுப்பதில்லை. இதிலும் அரசாங்கத்தின் உந்துதல் காணப்படுகின்றது - எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ.இ)

# வாசிகசாலையில் குழு மோதல் 8 பேருக்கு மூன்று மாதச் சிறை

## பருத்தித்துறை நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 14
2017ஆம் ஆண்டு இரவு நேரம் கம்பர் மலைப்பகுதியில் அமைந்துள்ள வாசிகசாலையில் இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் நடந்தேறிய குழு மோதலுடன் தொடர்புடைய எட்டு பேருக்கு மூன்று மாத கடூழிய சிறைத்தண்டனை விதித்து நேற்றுத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.
12 குற்றச்சாட்டுக்களின் கீழ் இவர்களுக்கு எதிராக வல்வெட்டித்துறை பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. ஏனைய குற்றங்களுக்கு இவர்களுக்கு 10 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட மூன்று மாத வெளிமறியல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
2017ஆம் ஆண்டு கம்பர்மலை பாரதி சனசமூக நிலையத்தில் இரவு நேரம் விளையாட்டு விழா முடிவடைந்து துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த பொழுது, இரு தரப்பினருக்கு இடையில் குழு மோதல் இடம்பெற்றிருந்தது. இந்தச் சம்பவத்தில் ஆறு பேர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ்ப்பாணம் பேதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் சாட்சிகள் சரியான முறையில் நிரூபிக்கப்பட்ட நிலையில் இவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டது. (ஒ.23)


## மரண அறிவித்தல்



### திரு.சாமுவேல் யோண் செல்வரட்ணம் (துரை)

யாழ்ப்பாணம் மத்தியூஸ் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட திரு.சாமுவேல் யோண் செல்வரட்ணம் (துரை) கடந்த (11.03.2023) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சாமுவேல்-சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான யோசப் - ஆனாச்சி பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், றோஸ் பெலிசிஸ்ரரின் அன்புக் கணவரும், றொமானுஸ்(றாகுலன்- உரிமையாளர் றொஜன் எலக்றிக்கல்ஸ்), றொமியூலஸ் (ரவி- யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்), றொபின்சன்(லண்டன்), றொகேசியன் (ஆசிரியர்- யா/ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), றொமிங்ரன் (பிரான்ஸ்), றொசானி, றொஜெபில்ஜென் (ஆசிரியர்- மன்னார் டிலாசால் கல்லூரி, நானாட்டான்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், டனிலா (தங்கா), கிரிஜா, தனுஷியா (லண்டன்), பிரதீபா (ஆசிரியர்), கௌரி (பிரான்ஸ்), யோண் றைடன் (பிரதேச செயலகம், கோப்பாய்) ஆகியோரின் அன்பு மாமனாரும் லிகானா, டிலுஜன், லித்வினா, ஜெனதீப், ஜெரேஸ், ஷோண் (லண்டன்), சைலன் (லண்டன்), றிசோத், கிஷோன், பியோனா (பிரான்ஸ்), றொக்ஷனா, றியான் ஆகியோரின் பாசமிகு பேரனும், மகேஸ்வரி, செபரட்ணம், புஸ்பராணி, அரியரட்ணம் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற செபஸ்தி மற்றும் திரேசம்மா காலஞ்சென்ற மத்தியூஸ் மற்றும் தவமணி, அன்ரன் பாலதாஸ், குணகுந்தா, மொனிக்கா, காலஞ்சென்ற புவனராஜேஸ் மற்றும் மெயிலி றோஸ் கிறாசியா (லண்டன்), சில்வெஸ்ரர், ஞானதாஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும் எமில்டா யூட், லீனஸ், விக்ரர் ஜெயதாஸ், அலெக்ஸ் அமலரட்ணம், தர்மினி யசிந்தா ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் இன்று (14.03.2023) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் இல. 15/8 மத்தியூஸ் வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியைத் தொடர்ந்து புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.15/8, மத்தியூஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**077 136 1002**

தகவல்:
குடும்பத்தினர்


# சிறைச்சாலைக்கு கஞ்சாவை கொண்டுசென்ற பெண் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 14
யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தனது கணவருக்கு கொடுப்பதற்காக கஞ்சாவை எடுத்துச் சென்றார் என்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.
கிளிநொச்சியைச் சேர்ந்த மேற்படி பெண், கணவருக்கான உடைகளுக்குள் கஞ்சாவை மறைத்து எடுத்துச் சென்றதாகவும் சோதனையின் போது அது மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஒ.5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சகல...

அனைத்துத் தொழிற்சங்கங்களும் இணைந்து நடத்துகின்ற ஜனநாயகப் போராட்டத்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் இணைந்துகொள்கின்றது.

அதிபர், ஆசிரியர்களின் வேதன முரண்பாடுகள் இன்னமும் தீர்க்கப்படாமை, பாடசாலை செல்வதற்கான போக்குவரத்துச் செலவு அதிகரிப்பு, வங்கிக் கடன் வட்டி வீதங்களின் அதிகரிப்பு, மாணவர்களின் போஷாக்குக் குறைபாடு, கற்றல் உபகரணங்களின் விலை உயர்வு, பொதுப் பரீட்சை மதிப்பீட்டின் முக்கியத்துவத்தை உணராமை, அதற்கான கொடுப்பனவுகளை அதிகரிக்காமை போன்றகல்விப்புலபிரச்சினைகளையும் முன்வைத்து நாளை புதன்கிழமை நடைபெறவுள்ள போராட்டத்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் முழுமையாக இணைந்துகொள்வதோடு அன்றைய நாள் அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரும் பாடசாலைக்குச் செல்லாது தமது எதிர்ப்பை வெளிப்படுத்துமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுக்கின்றது - என்றுள்ளது.

இதேவேளை - ஆசிரியர் சேவை சங்கமும் நாளைய போராட்டத்துக்கு முழுமையான ஆதரவை வெளிப்படுத்தியுள்ளது. (அ-ஒ.5)

## முறையான...

உள்ளூராட்சித் தேர்தலை பிற்போடுவதற்கு அதிகாரிகளைத் தூண்டியதாக பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கு எதிராக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு, நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படவுள்ளதாக எதிரணிகள் தெரிவித்துள்ளமை தொடர்பில் கொழும்புச் செய்தியாளர் எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

'பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரும் அளவுக்கு அவர் என்ன தவறு செய்தார்? எதிர்க்கட்சியின் மிரட்டலுக்கு அவர் அடிபணியமாட்டார். மிரட்டலுக்கு அஞ்சிப் பதவியை விட்டு ஓடும் அரசியல்வாதி அவர் அல்லர். அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை வந்தால் அது தோற்கடிக்கப்பட்டே தீரும். அறிவிப்பே இல்லாத உள்ளூராட்சி சபைத் தேர்தல், எதிர்காலத்தில் ஒழுங்கான அறிவிப்பு விடுக்கப்பட்டு நடைபெறும்.

இந்நிலையில் உள்ளூராட்சி அமைச்சுப் பதவியைத் தன்னகத்தே கொண்டுள்ள பிரதமர் தினேஷ் குணவர்த்தனவைச் சீண்டிப் பார்ப்பதால் தேர்தல் நடைபெறும் என்று எதிரணியினர் கனவு காணக்கூடாது.

நாம் பெரும்பான்மைப் பலம் கொண்ட அரசாங்கம். அரசாங்கத்துக்கு எதிரான எதிரணியினரின் எந்தப் பிரேரணையும் வெற்றியடையாது - என்றார். (அ-ஒ.5.22)

## வன்முறைக்குழு...

தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் காரைநகர் பகுதியிலுள்ள வீடொன்றில் இரண்டு மோட்டார் சைக்கிளில் சென்ற 6 பேர் கொண்ட குழு வீடொன்றைச் சேதப்படுத்தி தீவைத்துக் கொளுத்தி, ஒன்றரைக் கோடி பெறுமதியான சொத்துக்களைச் சேதப்படுத்தியிருந்தது. இது தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதேபோல் நாவற்குழி பகுதியிலுள்ள எரிபொருள் நிலையம் ஒன்றின் மீது தாக்குதல்கள் மேற்கொண்ட சம்பவம் தொடர்பிலும் பொலிஸாரால் நீண்டகாலமாகத் தேடப்பட்டு வந்த சந்தேகநபர்களை யாழ்.மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி பொ.மேனன் தலைமையில், உபபொலிஸ் பரிசோதகர் பிரதீப் குழுவினர் கைது செய்துள்ளனர்.

அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் வன்முறைச் சம்பவங்களுக்குப் பயன்படுத்துவதற்கென யாழ்ப்பாணம், கச்சேரிப் பகுதியில் மோட்டார் சைக்கிளைத் திருடி போலி இலக்கத்தகடுகளை மாற்றிப் பயன்படுத்தியமை தெரியவந்ததுள்ளது. மேலும் சில போலி இலக்கத்தகடுகளும் வன்முறைச் சம்பவங்களுக்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள்களும் இரண்டு வாள்களும் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் நவாலி, மானிப்பாய், காரைநகர், விசுவமடு பகுதிகளைச் சேர்ந்த 24 தொடக்கம் 26 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். மேலும் 3 சந்தேகநபர்களை பொலிஸார் தேடி வருகின்றனர். (அ-ஒ.26)

## தேர்தலைப்...

ரின் ஆதாரமற்ற குற்றச்சாட்டை அடியோடு நிராகரிக்கின்றேன் - இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலைப் பிற்போட அதிகாரிகளைத் தூண்டினார் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து பிரதமர் தினேஷுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதற்கு எதிரணிகள் ஆலோசித்து வருவது தொடர்பில் கொழும்புச் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

'எனக்கு எதிராக எந்தத் தரப்பு நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்தாலும் அதனை எதிர்கொள்ள நான் தயாராகவுள்ளேன். பெரும்பான்மை இல்லாத நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் எனது பிரதமர் பதவியையோ அல்லது அமைச்சுப் பதவியையோ கவிழ்க்க முடியாது. உள்ளூராட்சிசபைத் தேர்தலைக் குழப்புவதோ தேர்தலைப் பிற்போடுவதோ எனது நோக்கம் அல்ல. தேர்தல் உரிய நேரத்தில் நடைபெறும். நாட்டின் நிலைமை குறித்தும், மக்களின் நிலை தொடர்பிலும் அக்கறை இல்லாதவர்கள் வாய்க்கு வந்த மாதிரி உளறுவார்கள். அவர்களின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் வழங்கக்கூடாது' - என்றார். (அ-ஒ.5.22)

## வெயிலுக்குள்...

வடக்கு மாகாண கல்வித் திணைக்களம், வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு என்பன கவனம் செலுத்தியுள்ளன.

குறித்த பாடசாலையில் தரம் 11 கற்கும் மாணவிகள் மூன்றாம் தவணைப் பரீட்சைக்காக வகுப்பறைக் கட்டடங்களுக்கு வெளியே பரீட்சை எழுதவிட்டமை தொடர்பான ஒளிப்படங்கள் சமூக ஊடகங்களில் வெளிவந்தன.

பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட மண்டபம் இருந்தும் அதற்குள் பரீட்சை எழுதுவதற்கான வாய்ப்பு வழங்கப்படாமையாலேயே, மாணவிகள் வெயிலுக்குள்ளிருந்து பரீட்சை எழுதியுள்ளதாகத் தெரியவருகின்றது.

'மாணவிகள் இவ்வாறு பரீட்சை எழுதியமை தொடர்பில் நான் அறியவில்லை. என்னைப் பழி[illegible] ஆசிரியர்கள் சிலர் [illegible] களை எடுத்து சமூக ஊடகங்களில் பகிர்ந்துள்ளனர் ' என்று பாடசாலை அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

சமூக ஊடகங்களில் வெளியான ஒளிப்படங்களின் அடிப்படையில், வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் மாகாண கல்வித் திணைக்களத்திடம் விளக்கம் கோரியுள்ளது. மாகாண கல்வித் திணைக்கள அதிகாரிகள் நேற்றைய தினமே பாடசாலைக்கு நேரில் சென்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதற்கிடையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகமும் இந்த விடயம் தொடர்பில் கரிசனை செலுத்தியது. இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாது என்று அதிபர் ஆணைக்குழுவுக்கு உறுதியளித்துள்ளார் என்று அறியமுடிகின்றது. (அ-ஒ.5)

## 2024...

துறைசார் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலை அடுத்த ஆண்டு ஜனவரியில் நடத்துவதற்காகவே உள்ளூராட்சித் தேர்தலை நடத்தாமல் இழுத்தடிக்கப்படுவதாக சில ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. இது தொடர்பில் துறைசார் அதிகாரிகளிடம் கேட்டபோதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. அந்தத் தேர்தலில் கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாகத் தெரிவாகியிருந்தார். அவரது பதவிக் காலம் 5 ஆண்டுகள். ஆனால், அவர் தனது பதவிக் காலத்தின் 4 ஆண்டுகள் முடிவில் அதாவது 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தலுக்குச் செல்வதற்கான அறிவிப்பை விடுத்திருக்க முடியும். ஆனால், கடந்த ஆண்டு ஏற்பட்ட மக்கள் புரட்சி காரணமாக பதவி விலகியமையால் நாடாளுமன்றம் புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்தது. ரணில் விக்கிரமசிங்க, கோத்தாபயவின் எஞ்சிய பதவிக் காலம் வரை - 2024ஆம் ஆண்டு நவம்பர் வரையில் - பதவியிலிருக்கவேண்டும். அதற்கு முன்னர் அவர் பதவி துறந்தால் நாடாளுமன்றம் மீண்டும் ஒருவரை ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யவேண்டும். எனவே 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்துக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கான சாத்தியங்கள் இல்லை என்று துறைசார் வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (அ-ஒ.5)

## எரிபொருள்...

சீனாவைத்தளமாகக் கொண்ட சினோபெக் குழுமம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

தற்போதுள்ள முறைமைக்கு அமைவாக சினோபெக் குழும நிறுவனம் இலங்கையில் எரிபொருள் விநியோகம் மேற்கொள்வதற்கு விண்ணப்பித்துள்ளதாகத் தெரிவித்த குறித்த நிறுவனத்தின் பிரதிநிதிகள், அரசாங்கத்தினால் அடையாளம் காணப்பட்டுள்ள அம்பாந்தோட்டையில் பிரதான வலுசக்தி மையத்தை, சுத்திகரிப்பு நிலையத்துடன், நிர்மாணிக்கத் தேவையான முழு முதலீட்டையும் தமது நிறுவனம் செய்யத் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளனர்.

[illegible] நாட்டின் அபிலாஷை [illegible]டையில் உரிய அழைப்புகளுக்குப் பங்கேற்க தமது நிறுவனம் தயாராக இருப்பதாகவும் பிரதிநிதிகள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் பின்னர், இலங்கை துரித அபிவிருத்தியை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

அதேபோன்று, நாட்டில் முன்னெடுக்கப்பட்டுள்ள வெளிநாட்டு வர்த்தகங்களை எதிர்காலத்தில் ஊக்குவிக்க எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (அ-ஒ.இ)

## சாதாரணதரப்...

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள்இரண்டு வாரங்கள் தாமதமாகியுள்ள நிலையில் சாதாரண பரீட்சையை ஒத்திவைக்க நேரிடும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டுக்கும் இடையில் மூன்று மாத கால அவகாசம் வழங்கப்படவேண்டும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். (அ-ஒ.இ)

## மாடிக்கட்டடத்தில்...

பட்ட மாணவன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறான். மாணவன் ஆபத்தான கட்டத்தைத் தாண்டி இருப்பதாக மருத்துவமனை வட்டரங்களில் இருந்து அறியமுடிகிறது.

இந்தச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

நேற்று நண்பகல் மாணவன் தன் உயிரை மாய்த்துக் கொள்ளும் நோக்குடன் பாடசாலையிலுள்ள மாடிக் கட்டடம் ஒன்றின் மூன்றாவது மாடியிலிருந்து குதித்துள்ளான். தெய்வாதீனமாக அந்தக் கட்டடத்துக்கு நேர் எதிராகவுள்ள ஆலயத்துக்கு முன்பாகவுள்ள செல்லும் மின்மார்க்க வயர்களில் சிக்குண்டதன் காரணமாக மாணவன் நேரடியாக நிலத்தில் விழாததால், உயிராபத்து தவிர்க்கப்பட்டது. சக மாணவர்களாலும், ஆசிரியர்களாலும் மீட்கப்பட்ட மாணவன் உடனடியாக அம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டான்.

மாணவனின் காற்சட்டையிலிருந்து ஒரு கடிதம் மீட்கப்பட்டது. அதில், தனது உயிர்மாய்ப்பு முயற்சிக்கான விரிவான கடிதம் பாடசாலைப் புத்தகப் பையில் இருக்கின்றது என்று குறிப்பிடப்பட்டிருந்தது. மாணவனின் புத்தகப் பையைச் சோதனையிட்டபோது அதில், அவனுடைய உயிர் மாய்ப்பு முயற்சியை நியாயப்படுத்தும் வகையிலான 7 பக்கங்களைக் கொண்ட மிக நீண்ட கடிதம் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

'ப்ளூவேல்ஸ்' என்கின்ற இணைய விளையாட்டில் ஈடுபடுவதாகவும், அதில் தன்னுடன் விளையாடுபவர்களின் பெயர்களையும் குறிப்பிட்டுள்ளான். அந்த விளையாட்டில் தோல்வியடைந்தமையால் தன்னைக் கொல்வதற்கு முயற்சிகள் மேற்கொள்கின்றார்கள் என்றும் அவன் குறிப்பிட்டுள்ளான். அதனாலேயே தவறான முடிவு எடுத்து உயிர்மாய்க்க தீர்மானித்ததாகத் தெரிவித்துள்ளான்.

இதேவேளை - மேற்படி மாணவன், இதற்கு முன்னரும் இவ்வாறானதொரு முயற்சியில் ஈடுபட்டுத் தனக்குத் தானே கூரிய ஆயுதத்தால் காயமேற்படுத்திக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மாணவன் குறிப்பிடும் 'ப்ளூவேல்ஸ்' என்கின்ற இணைய விளையாட்டில் ஈடுபட்ட தமிழகத்தைச் சேர்ந்த பல இளைஞர்கள் இவ்வாறு தவறான முடிவு எடுத்து உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.5.20.26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பொலிஸார்-மக்கள் இடையே நாகர்கோவிலில் நேற்றிரவு மோதல்

யாழ்ப்பாணம், மார்ச் 14

விசாரணைக்குச் சென்ற பொலிஸாருக்கும் இளைஞர்களுக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக கைகலப்பு ஏற்பட்டுள்ளது. பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தி நிலைமையைக் கட்டுப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாகர்கோவிலில் மயானம் ஒன்றின் மதிலுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது. அந்த நிகழ்வுடன் தொடர்புடைய புலம்பெயர்வாசி ஒருவர் மீது நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதற்கு அமைவாக நாகர்கோவில் பகுதிக்கு நேற்று மாலை பொலிஸார் விசாரணைக்குச் சென்றுள்ளனர். அங்கு மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்த இளைஞர்களுடன் பொலிஸார் முரண்பட்டதாக அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர். அந்த முரண்பாடு இறுதியில் கைகலப்பாக மாறியுள்ளது. பொலிஸாரின் தாக்குதலில் 6 பேர் வரையில் காயமடைந்துள்ளதாக மக்கள் குற்றம்சுமத்துகின்றனர்.

இதன்போது பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் அந்தப் பகுதியிலுள்ள கொட்டில் ஒன்றும் எரிந்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். நேற்றிரவு வரையில் அந்தப் பகுதியில் பதற்றமான நிலைமையே காணப்பட்டது.

(ஒ-26)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 72 பரப்புக் காணி விற்பனைக்கு.

- பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 KM தூரம்
- குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
- புத்தூர்-சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் இருந்து 500 M தூரத்தில்.
- நன்னீர் ஊற்று நிலம்.
- விவசாயம் செய்யவும், வீடு கட்டவும் உகந்த காணி.
- ஒரு பரப்பின் விலை 1 இலட்சம் ரூபா மட்டும்.
- 03 பரப்பாக பிரித்துக்கொடுக்கப்படும்.

தொடர்பு:
076 755 8606
074 318 7263

(CS 23890)1-6

## Office Space for Rent

யாழ்.போதனா வைத்தியசாலை அருகில் உள்ள கட்டடத்தில் 1ம், 2ம் மாடியில் உள்ள கடைகள் வாடகைக்கு உண்டு.

076 915 1093, 077 622 1780

## வேலை வாய்ப்பு

வடமராட்சியில் இயங்கும் பிரபல தனியார் நிறுவனம் ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை

- ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
- க.பொ.த. சாதாரணதரம் கணிதம் உட்பட 06 பாடங்களில் சித்தி
- வயது: 18 - 55

வடமராட்சி மக்களுக்கு முன்னுரிமை

077 562 1487

## மணமகள் தேவை

சுவிஸ் பிரஜாவுரிமை உடைய 39 வயதுடைய இந்து குடும்பம் ( N ) விவாகரத்தான (குழந்தைகள் அற்ற) சுவிஸ்ஸில் வசித்துவரும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு: 0041 779 842 078

(CS 23967) 1-6

## சமையல் வேலைக்கு ஆள்கள் தேவை

யாழ். நாவலர் மகாவித்தியாலயம் அருகாமையில் உள்ள சைவ உணவகத்துக்கு சமையல் வேலைக்கு ஆள்கள் தேவை.

076 553 0813

## சாரதி தேவை

கனரக வாகன சாரதி தேவை (AD)

மேலதிக விபரங்களுக்கு கீழ் உள்ள முகவரிக்கு நேரில் வரவும்.

ராஜபிளாசா

பலாலி வீதி, கோண்டாவில்.




## DHL வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

சகல நாடுகளுக்கும் கடிதங்கள்

3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. Road, Jaffna.
0777 55 45 28 / குறிப்பு: வேலையாட்கள் தேவை.

## வீடு வாடகைக்கு

குமரபுரம் பரந்தன் பாடசாலைக்கு அருகாமையில் (50m) ஐந்து அறைகள் சகல வசதிகளுடனும் AC இணைந்த குளியலறை வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு.

வாடகை - 70,000/-

தொடர்பு: 077 330 0257 (cs.22367) (2.6)

## வேலைக்கு ஆள்கள் தேவை

- **தனியார் நிறுவனம் ஒன்றின் சுன்னாகக் கிளைக்கு கிளை பொறுப்பாளர் (ஆண்) தேவை.**
  வயதெல்லை 35 - 40
  முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- **திருநெல்வேலி கிளைக்கு Office boy தேவை.**
  வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.
  வயதெல்லை 20 - 25

074 191 7461

(CS/23953)4.6

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தாவடியில் 5 பரப்புக் காணி விற்பனைக்கு.

மூன்று பரப்பாகவும், இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.

K.K.S. வீதியில் இருந்து இரண்டாவது காணி.

தாவடி சந்தியிலிருந்து 100 M தூரத்தில்.

தொடர்பு:- 076 43 65 814

(CS 1150)

## பி.ஜெ.பர்னான்டோ

கண் பரிசோதனை செய்து கண்ணாடி வழுங்குபவர்கள், பல் கட்டுபவர்கள்.



P.J.FERNANDO
DENTAL & OPTICAL WORKS

077 864 3992 / 077 868 0360
No.220, 1st Cross Street, Jaffna.
(Vembady Signal Junction)

(CS 23960)1-6


## மரண அறிவித்தல்

தோற்றம்
20 - 11 - 1969



மறைவு
12 - 03 - 2023

### திருமதி நாகரஞ்சினி கிருபாகரன்

வடலியடைப்பை பிறப்பிடமாகவும் , தாமரை வீதி ஆறுகால்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரஞ்சினி கிருபாகரன் நேற்றுமுன்தினம் (12.03.2023) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆனந்தகுமாரசாமி நாகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தெய்வசிகாமணி நாகரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகளும், கிருபாகரனின் அன்பு மனைவியும், விபுசன், ஜனார்த்தன், கோபிகா ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆனந்தரஞ்சினி, ஆனந்தராஜன், காலஞ்சென்ற சுதந்திரராஜன் மற்றும் செல்வகுமார், செல்வரஞ்சன், சிவரஞ்சினி, சுபாசினி, கஜசுதன், சிவாணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், விக்கினேஸ்வரன், டெய்சிமலர், கார்த்திகா, தசிகரன், சசிகுமார், சத்தியரூபினி, ஜெகநாதன், கருணாகரன், காலஞ்சென்ற மாலினி மற்றும் கஜேந்திரன், கமலராணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14.03.2023) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அவரின் இல்லத்தில் இருந்து தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நணபர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 112 0338
077 359 7318 (CS 23957) (5/6)

தகவல்:
குடும்பத்தினர்.

## துசாக க்ருகயக்ஞ அழைப்பு



கடந்த (06.03.2023) திங்கட்கிழமை தேகவியோகமடைந்த எமது குடும்பத்தலைவர்

**அமரர் ப்ரம்மஸ்ரீ**

**சுப்ரமணியஐயர் மகோதேவசர்மா**

அவர்களின் உத்தரக்கிரியைகள் பின்வரும் திகதியில் நடைபெறும்.

- தசாகம் - 15.03.2023 புதன்கிழமை 10.00 மணிக்கு
- க்ருகயக்ஞம் - 19.03.2023 ஞாயிற்றுக்கிழமை 11.30 மணிக்கு

எல்லோரும் இவ்வழைப்பினை ஏற்றுக்கொண்டு ஞாயிற்றுக்கிழமை பகல் நடைபெறும் சமாராதனையிலும் கலந்துகொள்ளும் வண்ணம் வேண்டுகின்றோம்

V.C லேன், கோப்பாய் தெற்கு, குடும்பத்தினர்
077 817 7878, 077 700 4522

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.